# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 245/மா/2017

ஆணை எண். 276/2017

நாள் : 14/12/2017

திரு C. இராமலிங்கம்,
திருவொற்றியூர். – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் – 1,
சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை, திருவொற்றியூர், எண்.11/4, அம்சா தோட்டம் முகவரியில் வசிக்கும் திரு C. இராமலிங்கம் அவர்களின் 26.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.12.2017 அன்று பெறப்பட்டு 245/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, திருவொற்றியூர், எண்.11/4, அம்சா தோட்டம் முகவரியில் வசிக்கும் திரு C. இராமலிங்கம் என்பவர் தான் வாகன ஓட்டுநராகப் பணியாற்றி, திருவொற்றியூர் நகராட்சியில் பணியிலிருந்து 31.03.2001 அன்று ஓய்வு பெற்றதாகவும், பணி ஓய்வு பெற்று 16 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தனது சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டுள்ளார். முறையீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட ஆவண நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. முறையீட்டு மனுதாரர் மூத்த குடிமகனாகவும் ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளராகவும் இருக்கும் நிலையில், அவரது முறையீட்டினை மனித நேயத்துடன் பரிசீலித்து மேலும், காலம் தாழ்த்தாமல் அவரது கோரிக்கை குறித்த மனுமீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள

இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதுசம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த அறிக்கையினை **30 நாட்களுக்குள்** அனுப்பும் படியும் அறிவுறுத்தப்படுகிறது.

**2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 14–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, **அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.**

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

**உதவி ஆணையர்,**
**மண்டலம் .1,**
**எண்.947, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,**
**சென்னை மாநகராட்சி,**
**சென்னை – 600 019 (இணைப்புடன்).**

**திரு சி. இராமலிங்கம்,**
**எண்.11/4, அம்சா தோட்டம்,**
**திருவொற்றியூர்,**
**சென்னை – 600 019.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்